# போரை நிறுத்து ! அரசியல் தீர்வை முன்வை !

கலாநிதி விக்ரமபாகு

## எமது அன்பான கொழும்பு மாவட்ட தமிழ் மக்களே!

தமிழ் மக்கள் தற்போது இன அழிப்பு போருக்கு முகம் கொடுத்து நிற்கின்றனர். பிரந்திய சர்வதேச சக்திகளின் ஆதரவோடு மூர்க்கத்தனமான போரை மகிந்தர் அரசு தமிழ் மக்கள் மீது ஏவிவிட்டுள்ளது. போர் தொடர்பான சர்வதேச நியமங்களையெல்லாம் தூக்கி விசிவிட்டு நாள் தோறும் கொத்துக் கொத்தாக தமிழ் மக்களை கொலை செய்து கொண்டிருக் கின்றது. தினமும் சராசரியாக 50 பேர் கொலை செய்யப்படுகின்றனர். 150 பேர் காயமடைகின்றனர்.

மறுபக்கத்தில் உணவுப் பொருட்களை அனுப்பாது போர் அபாயத்தில் இருக்கும் மக்களை பட்டினி போட்டுச்சாக வைக்கின்றது. உயிர்காக்கும் மருந்துப் பொருட்களை வழங்காது சாகடிக்கின்றது. அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு வந்தவர்களை உறவினர்களுடன் கூட பேச விடாது முகாம்களில் அடைத்து வாட்டி வதைக்கின்றது இளைஞர்களை கைது செய்து சித்திரைவதை செய்கின்றது.

பிராந்திய சக்திகளும், சர்வதேச சக்திகளும, தத்தம் அரசியல் நலன்களுக்காக தொடர்ச்சியான மௌனத்தில் உள்ளனர் வலிமையான அழுத்தங்கள் கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. சர்வதேச நிறுவனங்கள் எழுப்பும் குரல்களையும் இச் சக்திகள் மௌனமாக்க முயல்கின்றன.

இந்நிலையில் இவ் நச்சுச் சூழலிருந்து தமிழ் மக்களையும் தமிழ் தேசிய அரசியலையும் அதன் வழியான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் உடனடியாக விடுவித்தாக வேண்டும்.

இதற்கு பரந்தளவிலான உலகளாவிய வேலைத்திட்டங்கள் தேவை. மகிந்தர் அரசிற்கு எதிராகவும் அவர்களுக்கு உதவும் பிராந்திய சர்வதேச சக்திகளுக்கெதிராகவும் உலகம் தழுவிய முற்போக்கு, ஜனநாயக சக்திகளை அணிதிரட்டுவதன் மூலமே அதனை சாத்தியமாக்க முடியும். இப்பணிகளை ஏற்கனவே புலர் பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழ் மக்களும் தமிழ் நாட்டுத் தமிழ் மக்களும் ஆரம்பித்து விட்டனர். தினமும் பல்வேறு போராட்டங்களை நடாத்தி உலகின் மனச்சாட்சியை தட்டியெழுப்பிக் கொண்டிருகிருக்கின்றனர்.

**இப் பணியில் ஓர் பகுதியையாவது கொழும்பு வாழ் தமிழ் மக்களாகிய நாம் மேற்கொள்ள வேண்டாமா?**
கொழும்பு தமிழ் மக்கள் தனித்து எவற்றையும் இன்றைய சூழலில் செய்து விட முடியாது அவ்வாறு செய்ய முயன்றால் தமது வெறித்தனங்களை ஏவிவிடுவதற்கு மகிந்தர் அரசு ஒரு போதும் தயங்காது.

எனவே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கொள்கை ரீதியாக ஏற்று செயற்படும் தென்னிலங்கைச் சக்திகளின் துணையுடன் தான் நாம் செயற்பட முடியும்.

**அந்த தென்னிலங்கை சக்தி யார்? என நாம் தேட வேண்டுமா?**

முழுத் தென்னிலங்கையும் மகிந்தரின் இன அழிப்பு யுத்தத்திற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கம் போது ஒரேயொரு தென்னிலங்கை சக்தி மட்டும் 1970 களிலிருந்து இலங்கையில் மட்டுமல்ல முழு உலகமும் வலம் வந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

**“தமிழனுக்குப் பிறந்தவன்”** என பேரினவாதிகள் கேலி செய்த போதும், உயிர் அச்சுறுத்தல்கள் விடுத்த போதும் எதற்கும் அஞ்சாது குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

சோசலிசம் பேசிய பாரம்பரிய இடதுசாரிகள் எல்லாம் மகிந்தரின் தாழ்வாரத்தில் ஒதுங்கிய நியைில் புதிய இடதுசாரிகள் என தம்மை கூறிக் கொள்ளும் ஜே.வி.பினர் மகிந்தரின் இன அழிப்பு யுத்தத்திற்கு சாமரை வீசும் நிலையில் போருக்கு எதிராக வன்மையாக குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

**அச் சக்தி யார்?**

**அவர்தான் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன**

கேம்பிரிஜ் பல்கலைகழகம் பெற்றெடுத்த பொறியியல்துறை கல்விமான்!

மாபெரும் சோசலிச சிந்தானவாதி!

**அன்பான கொழும்பு வாழ் தமிழ் மக்களே**

* **இன்றைய இனஅழிப்பு சூழலில் உலகெங்கும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய ஒரு தென்னிலங்கை குரல் தேவை!**
* **சிங்கள மக்களின் மனச்சாட்சியை தட்டி எழுப்புவதற்கு ஒரு சிங்களக் குரல் தேவை!**
* **போரை நிறுத்து, அரசியல் தீர்வை முன்வை என கொள்கை வழி நின்று செயல்படும் கொள்கைக் குரல் தேவை!**
* **கொழும்பு வாழ் சேரிப்புற, தோட்டப்புற ஏழைத் தமிழ் மக்களின் அபிலாசைகளை அரசியல் அரங்கிற்கு கொண்டுவர ஒரு இடதுசாரிக் குரல் தேவை!**

* தென்னிலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் நியாயப்பாடுகளை முன் கொண்டு செல்வதற்கு ஒரு வலிமையான அரசியல் தளம் தேவை!
* இவற்றையெல்லாம் பூர்த்தி செய்யக் கூடிய ஒரேயொரு தென்னிலங்கை அரசியல்வாதி **கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா** மட்டுமே!

**அன்பான தமிழ் மக்களே!**

மேல் மாகாண சபைத் தேர்தலில் **இடதுசாரி முன்னணிக்கும் கலாநிதி விக்கிரமபாகுவிற்கும்** வாக்களித்து

* கொழும்பு மாவட்டத்தில் தமிழர் அரசியலை பலப்படுத்துவோம்!
* தமிழ்த் தேசிய அரசியல் அபிலாசைகளுக்காக உலகளாவிய அளவில் செயற்படும் லட்சக்கணக்கான உள்ளங்களோடு நாங்களும் கரம் கோப்போம்!
* போரை நிறுத்து அரசியல் தீர்வை முன்வை என மகிந்தா் அரசின் செவிப்பறை கிழிய குரல் ஏழுப்புவோம்!
* கொழும்பு வாழ் ஏழைத் தமிழர்களின் பிரச்சினைகளை அரசியல் அரங்கத்திற்கு கொண்டு வருவோம்!
* தமிழ்த் தேசிய அரசியலுக்கு சார்பான சிங்கள சக்திகளை வலுப்படுத்துவோம் !

## இடம்பெயர்ந்தோர் தமிழர் ஒன்றியம்

# போரை நிறுத்து ! அரசியல் தீர்வை முன்வை !

**கலாநிதி விக்கிரமபாகு**

**இன்றைய இன அழிப்பு சூழலில் உலகெங்கும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க கூடிய குரல்!**

**சிங்கள மக்களின் மனச் சாட்சியை தட்டி எழுப்புவதற்கு ஒரு சிங்களக் குரல் !**



X

37 X




# இடதுசாரி முன்னணி

143/3 கீயூ வீதி கொழும்பு- 02 தொலைபேசி 0112430621 தொலைநகல் 0112305963